**கவனிக்க** .- *22.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1839 - 2013 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2013.11.29

*1839 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | 1046 | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1059 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1054 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1056 | | |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2013, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2013 இன் இல. 356

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/229.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2008, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதியிலிருந்து லெப்டினனன்ட் கர்னல் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக லெப்டினனன்ட் கர்னல் உரகொட அப்புஹாமிலாகே ஆனந்த விமலவீர, யூஎஸ்பீ, இபப (உ/60172)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2008, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினனன்ட் கர்னல் உரகொட அப்புஹாமிலாகே ஆனந்த விமலவீர, யூஎஸ்பீ, இபப (உ/60172)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, செத்தெம்பர் 15.

11-997

---

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/31.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி தாழ்த்துதலும் இளைப்பாறுதலும்

**பதவி தாழ்த்துதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, சனவரி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து லெப்டினனன்ட் கர்னல் பதவி வரை பதவி தாழ்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது :-

தற்காலிக கர்னல் வில்லர ஆரச்சிகே கபில பண்டார உதலுபொல, ஆர்எஸ்பீ (உ/60496)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, சனவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினனன்ட் கர்னல் வில்லர ஆரச்சிகே கபில பண்டார உதலுபொல, ஆர்எஸ்பீ (உ/60496)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, சனவரி 05.

11-996

---

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/29.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி தாழ்த்துதலும் இளைப்பாறுதலும்

**பதவி தாழ்த்துதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, சனவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து லெப்டினனன்ட் கர்னல் பதவி வரை பதவி தாழ்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது :-

தற்காலிக கர்னல் கமலசிரி சமந்த ஒவிரிபான (உ/60557)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, சனவரி மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினனன்ட் கர்னல் கமலசிரி சமந்த ஒவிரிபான (உ/60557)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, பெப்புருவரி 22.

11-989

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/33.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி தாழ்த்துதலும் இளைப்பாறுதலும்

### பதவி தாழ்த்துதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, மார்ச் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்னல் பதவி வரை பதவி தாழ்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீ கரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக கர்னல் மனிக்குகே பந்துல த சில்வா ஜயதிலக, ஆர்எஸ்பீ, ஐஎஸ்சீ (உ/60658)

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, மார்ச் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கர்னல் மனிக்குகே பந்துல த சில்வா ஜயதிலக, ஆர்எஸ்பீ, ஐஎஸ்சீ (உ/60658)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, பெப்புருவரி 22.

11-984

---

2013 இன் இல. 357

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/409.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

### பதவி நிரந்தரமாக்குதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2013, யூன் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து லெப்டினன்ட் கர்னல் பதவியில் நிரந்தர மாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது :-

தற்காலிக லெப்டினன்ட் கர்னல் இந்தக யகன்டாவல இமிஇபொ (உ/61088)

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2013, யூன் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கர்னல் இந்தக யகன்டாவல இமிஇபொ (உ/61088)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, மே 30.

11-991

---

2013 இன் இல. 358

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/39.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதலும் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றுதலும்

### இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் ஹேரத் முதியன்சேலாகே ரன்ஜித் பாலித கோனவல, யூஎஸ்பீ, இஇபொப (உ/63104)

### நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் (பொது) உபசேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஹேரத் முதியன்சேலாகே ரன்ஜித் பாலித கோனவல, யூஎஸ்பீ, இஇபொப (உ/63104)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.
கொழும்பு,
2011, திசெம்பர் 30.

11-995

2013 இன் இல. 359

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ.எம்/341.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் ஊரு லியனகே மஹேஷ் புஷ்பகுமார குணசிங்ஹ, கரெ (உ/65732)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2012, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து மருத்துவக் காரணங்களுக்காக இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஊரு லியனகே மஹேஷ் புஷ்பகுமார குணசிங்ஹ, கரெ (உ/65732)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, பெப்புருவரி 20.

11-988

---

2013 இன் இல. 360

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/241.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் உத்தியோகத்தர் 2013, சனவரி மாதம் 30 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் தெரமுணி சரத் வசந்த குமார, விகாரெ (உ/63032)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, சனவரி மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் தெரமுணி சரத் வசந்த குமார, விகாரெ (உ/63032)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2012, செத்தெம்பர் 15.

11-930

---

2013 இன் இல. 361

எம்ஓடி/டீஈஎவ்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரி/392.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, மார்ச் மாதம் 13 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் சுரவீர ஆரச்சிகே தொன் பன்துல சுரவீர, கவீப (உ/61393)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, மே 09.

11-985

2013 இன் இல. 362

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎம்/417.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் திசாநாயக்க முதியன்சேலாகே ரஷிக மதுரங்க திசாநாயக, கவீப (உ/65242)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணத்தின் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் திசாநாயக்க முதியன்சேலாகே ரஷிக மதுரங்க திசாநாயக, கவீப (உ/65242)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, யூன் 28.

11-987

---

2013 இன் இல. 363

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/396.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி நிரந்தரமாக்குதலும் இளைப்பாறுதலும்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக மேஜர் கதிரப்புலிகே உபாலி சம்சன், விகாரெ (உ/63832)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

மேஜர் கதிரப்புலிகே உபாலி சம்சன், விகாரெ (உ/63832)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, மே 30.

11-990

---

2013 இன் இல. 364

டிஆர்எப்/21/ஆர்ஈசீரீ/3247.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதலும் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றுதலும்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் ஹேரத் முதியன்சேலாகே குலதிலக பண்டா, இசைப (உ/63957)

**நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் (பொது)

உபசேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்ரின் ஹேரத் முதியன்சேலாகே குலதிலக பண்டா, இசைப (உ/63957)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.
கொழும்பு,
2011, மார்ச் 23.

11-994

---

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/53.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி தாழ்த்துதலும் இளைப்பாறுதலும்

**பதவி தாழ்த்துதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2011, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து கப்ரின் பதவி வரை பதவி தாழ்த்துதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

தற்காலிக மேஜர் டேவிட்லாகே வசந்த குமார, உடிப (உ/65456)

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2011, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

கப்ரின் டேவிட்லாகே வசந்த குமார, உடிப (உ/65456)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2011, திசெம்பர் 30.

11-998

2013 இன் இல. 365

எம்ஓடி/டீஈஎவ்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/322.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, சனவரி மாதம் 09 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்ரின் உடுவ விதானலாகே தொன் நெவில் ஆனந்த பெரேரா, கரெ (உ/63682)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, சனவரி 21.

11-932

---

2013 இன் இல. 366

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈ/54.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதலும் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றுதலும்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினனட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) தொன் குணசிரி சரத் குமார சேனாரத்ன, இஇபொசேப (உ/66041)

**நிரந்தர (பொது) உபசேவைக்கு மாற்றுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் (பொது)

உபசேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) தொன் குணசிரி சரத் குமார சேனாரத்ன, இஇபொசேப (உ/66041)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.
கொழும்பு,
2012, பெப்புருவரி 13.

11-993

---

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/சீடபிள்யூ/220.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்

2009, மார்ச் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது:-

லெப்டினன்ட் ஹிட்டிஹாமி முதியன்சேலாகே கமகெதர நந்தன பண்டார, இசிரெ (உ/63730)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

கொழும்பு,
2012, செத்தெம்பர் 14.

11-928

---

2013 இன் இல. 367

டிஐஆர்எப்/ஆர்ஈசீரீ/236/ஏவை.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கடெற் உத்தியோகத்தர் 2009, மே மாதம் 01 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படை நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினன்ட் பதவி வரிசையில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி தொடக்கம் இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணிக்கு உள்ளிடுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் களிப்புடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சி/56744 கெடெற் உத்தியோகத்தர் கலகெதர கமகே லங்கா மிஹிராணி குணசேகர

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

கொழும்பு,
2012, திசெம்பர் 24.

11-927/1

---

2013 இன் இல. 368

டிஐஆர்எப்/ஆர்ஈசீரீ/236/ஏவை.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கடெற் உத்தியோகத்தர் 2009, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படை நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினன்ட் பதவி வரிசையில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி தொடக்கம் இலங்கைத் தரைப்படை மருத்துவச் சிறப்பணிக்கு உள்ளிடுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் களிப்புடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சி/56745 கெடெற் உத்தியோகத்தர் சருக்காலி கலப்பத்திகே ஷெஹானி த சில்வா

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

கொழும்பு,
2012, திசெம்பர் 24.

11-927/2

எம்ஓடி/டிஈஎப்/02/01/ஏஆர்எப்/சீஏஎஸ்/76.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைத் தரைப்படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர், 2010, ஓகத்து மாதம் 25 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் மல்லவஆரச்சி கமகே ஹரேந்திர மல்லவஆரச்சி, கரெ (உ/ 65011)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

கொழும்பு,
2012, பெப்புருவரி 22.

11-979

---

டிஆர்எப்/21/ஆர்ஈசீரீ/325.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைத் தரைப்படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர், 2011, சனவரி மாதம் 24 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து அபகீர்த்தியாக அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் கொண்டப்பெரும ஆரச்சிகே அகலந்த உதந்த கொன்டப்பெரும, விகாரெ (உ/ 65047)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

கொழும்பு,
2011, ஏப்பிறல் 01.

11-980

---

2013 இன் இல. 369

எம்ஓடி/டீஈஎவ்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/373.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணத்தின் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் தீகொட கமகே பிரதீப் ரங்க குமார, கரெ (உ/66845)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, ஏப்பிறல் 05.

11-929

---

2013 இன் இல. 370

எம்ஓடி/டீஈஎவ்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈஎம்/421.

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணத்தின் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் மானவடுகே அமரசிரி மானவடுகே, இகாப (உ/ 65569)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, யூன் 27.

11-931

*2013 இன் இல. 371*

*எம்ஓடி/டீஈஎவ்/02/01/ஏஆர்எப்/ஆர்ஈரீ/346.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2013, மே மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படை நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்ரின் ஜயவிக்ரம ஆரச்சிகே வசந்த பியல் ஜயவிக்ரம, இசிரெ (உ/63734)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2013, ஏப்பிறல் 05.

11-986

---

*2013 இன் இல. 372*

*டீ/ஏஎப்/787.*

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2011, மார்ச் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :-

விங் கொமாண்டர் ரம்பட்டிதேவகே இரான் தயனாத் பிட்டுவெல்கொட - (01592) - நி/ரெஜிமன்ட்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு
கொழும்பு,
2010, மே 10.

11-982

*2013 இன் இல. 373*

*டீ/ஏஎப்/702.*

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, மே மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :-

ஸ்கொட்ரன் லீடர் மஜுஆன கங்கானம்கே பிரியந்த கெமிலஸ் - (01649) - தொ/பொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு
கொழும்பு,
2009, மே 25.

11-983

---

*2013 இன் இல. 374*

*டீ/ஏஎப்/685.*

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய மகளிர் உத்தியோகத்தர் 2009, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதியிலிருந்து இலங்கை வான்படையிலிருந்து இளைப் பாறுகிறார் :-

ஸ்கொட்ரன் லீடர் கமகே நெலுநிகா சந்திமாலி பெரேரா - (மஉ/01018) - நிருவாகம்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு
கொழும்பு,
2009, பெப்புருவரி 13.

11-981

# மற்றைய நியமனங்களும் பிறவும்

*2013 இன் இல. 375*

**இலங்கைத் தரைப்படை - தொண்டர் படை**

*தரைப்படைத் தளபதியினால் அங்கீகரிக்கப்பெற்ற வரிசைப் பதவியை நிரந்தரமாக்குதல்*

**வரிசைப் பதவியை நிரந்தரமாக்குதல்**

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2012, மாச்சு மாதம் 23 ஆந் திகதி முதல் கப்ரின் வரிசைப் பதவியில் நிரந்தரமாக்கப்பெற்றுள்ளார் :-*

*தற்காலிக கப்ரின் மெனிக் பேடிகே தம்மிக சமரநாயக, கெகாப (உ/5097)*

ஜே. ஜயசூரிய,
வீஎஸ்வி, யூஎஸ்பி, என்யூ. பிஎஸ்சீ,
லெப்டினன்ட் ஜெனரல்,
தரைப்படைத் தளபதி.

கொழும்பு,
*2013, ஏப்பிறல் 29.*

*11-1094*

---

*2013 இல. 376*

*1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(3) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகளை சம்பந்தப்பட்ட நீதி நிருவாகப் பிரிவுக்கான ஒரு சமாதான நீதவானாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதிவான்களாகவும் நியமிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நீதி அமைச்சர்.*

*நீதி அமைச்சு,*
*கொழும்பு 12,*
*2013, நவெம்பர் 8.*

| *தொடர் இல.* | *பெயர்* | *முகவரி* | *நீதிமன்ற வலயம்* |
|---|---|---|---|
| 01. | சட்டத்தரணி திரு. நாகலிங்கம் அரியபுத்திரன் | விலியாடி, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் | மல்லாகம் |
| 02. | சட்டத்தரணி திரு. சண்முகலிங்கம் சிவரூபன் | தாளையம்பதி வீதி, நுணாவில் நிலையம், சாவகச்சேரி | சாவகச்சேரி |
| 03. | சட்டத்தரணி திரு. ரத்நாயக்க முதியன்சேலாகே திலகரத்ன | இல. 37/பி, ஹெடிகம, பிலியந்தலை | பாணந்துறை |
| 04. | சட்டத்தரணி திருமதி சந்தியா பிரியதர்ஷனி ஹப்புதன்திரீ | இல. 141, பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 05. | சட்டத்தரணி திருமதி அத்திடிய பனாகொட லியனகே சுவர்ணமாலி அபேகுணரத்ன | இல. 16/16, புதிய நகரம், சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி, புதிய நகரம் வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 06. | சட்டத்தரணி திருமதி டிராணி தீபிகா தமயந்தி நவரத்ன | "ரெபேகா", விளையாட்டு மைதான வீதி, வென்னப்புவ | நீர்கொழும்பு |
| 07. | சட்டத்தரணி திரு. ஜயசூரிய ஆரச்சிகே நளின் பெரேரா | "ரொலன்கா", லும்பினி மாவத்தை, மல்கடுவாவ, குருநாகல் | குருநாகல் |
| 08. | சட்டத்தரணி திரு. பலிஹபிட்டிய கமகே பிரியங்கர டயஸ் | இல. 52, அலகொலதெனிய வீதி, மல்கடுவாவ, குருநாகல் | குருநாகல் |
| 09. | சட்டத்தரணி திருமதி அசுரமுனி கமனி புஸ்பகாந்தி த சில்வா | "திலக செவன", பொலிஸ், வங்களா வீதி, மொரகல்ல, பேருவளை | களுத்துறை |

| தொடர் இல. | பெயர் | முகவரி | நீதிமன்ற வலயம் |
|---|---|---|---|
| 10. | சட்டத்தரணி திரு. பாலித ஹெட்டிஆரச்சி | ரன்னிகே தோட்டம், நாவிமன தெற்கு, மாத்தறை | மாத்தறை |
| 11. | சட்டத்தரணி திரு. ஹேவாவசம் அதுரலியகே சந்தன சிசிர குமார | ஸ்ரீ சுனந்த மாவத்தை, தண்டாலிகே வத்த, வல்கம, மாத்தறை | மாத்தறை |
| 12. | சட்டத்தரணி திரு. கொட்டஹச்சி கங்கானம்கே தர்மதாச கொட்டச்சி | "சரசவி", மாலவன்கொட, காலவில, பேருவளை | களுத்துறை |
| 13. | சட்டத்தரணி திரு. மொரகொட ஆரச்சிகே மானெல்சிறி ஆனந்த மொரகொட | இல. 122/2இ, பண்டாரவளை வீதி, பதுளை | பதுளை |
| 14. | சட்டத்தரணி திரு. பத்மலால் தயானந்த வெத்தசிங்க | இல. 143/டீ, புலுகஹமுல்ல, மினுவாங்கொடை | நீர்கொழும்பு |
| 15. | சட்டத்தரணி திரு. கஹட்டபிட்டியகே மங்கள திலக் பெரேரா | இல. 97, த அல்விஸ் பிளேஸ், களுத்துறை தெற்கு | களுத்துறை |
| 16. | சட்டத்தரணி திருமதி பாலமண்டிகே றோஸ் குமாரி நிஷாந்தி பெர்னாந்து | இல. 97, த அல்விஸ் பிளேஸ், களுத்துறை தெற்கு | களுத்துறை |
| 17. | சட்டத்தரணி திரு. பாலமானகே விஜயரத்ன | வத்தேகெதர வீதி, பனாபிட்டிய, வஸ்கடுவ | களுத்துறை |
| 18. | சட்டத்தரணி திரு. சனத் எதிரிசிங்க | "இசுறு', கிதுல்கொட, அகலவத்த | மதுகம |
| 19. | சட்டத்தரணி திருமதி ராஜபக்ஷகே அஜிதா சின்தனீ சமரசேகர | இல. 125/1இ, பயாகல வடக்கு, பயாகல | களுத்துறை |
| 20. | சட்டத்தரணி திரு. பொல்வத்த தூரகே சிறிபால | இல. 12ஏ, அரலிய உயன, களுத்துறை தெற்கு | களுத்துறை |
| 21. | சட்டத்தரணி திரு. பிரியந்த தேவபிரிய ஹெட்டிஆரச்சி | இல. 240, சோபிதாராம வீதி, நாகொடை களுத்துறை | களுத்துறை |
| 22. | சட்டத்தரணி திரு. குமாரதாச வீரதுங்க | இல. 313, 5 ஆம் தெரு, பிலமினா தோட்டம், தொடன்கொட | மதுகம |
| 23. | சட்டத்தரணி திரு. பெரகம விதானகே விஜேசேன | "விஜய" சுஹதஉயன, வெலிமானான,மதுகம | மதுகம |
| 24. | சட்டத்தரணி திருமதி ஜயந்தி ஏக்கநாயக்க | இல. 8/239, காலி வீதி, ஏத்தகம, களுத்துறை | களுத்துறை |
| 25. | சட்டத்தரணி திருமதி கஹட்டபிட்டியகே ரன்சிறினி அசந்தா கஹட்டபிட்டிய | இல. 356இ, ஹொரண வீதி, களுத்துறை வடக்கு | களுத்துறை |
| 26. | சட்டத்தரணி திருமதி ரயிகமகே தோன துசிதா திசாநாயக்க | இல. 73/5/பி, பன்சலை வீதி, களுத்துறை வடக்கு | களுத்துறை |
| 27. | சட்டத்தரணி திரு. தெட்சணாமூர்த்தி கங்காதரன் | இல. 157/5, குடியிருப்பு வீதி, பூந்தோட்டம், வவுனியா. | வவுனியா |
| 28. | சட்டத்தரணி திரு. குணநெத்திகே தொன் ரொஷான் பிரசன்ன விமலரத்ன | இல. 8/4பி, இகலகரஹமுன, கடவத்த | மஹர |
| 29. | சட்டத்தரணி திரு. மதம்பெரும ஆரச்சில்லாகே காமினி சரத்குமார | இல. 79/4ஏ, கொழும்பு வீதி, குருநாகல் | குருநாகல் |
| 30. | சட்டத்தரணி திரு. சரத் சந்தசிறி சூரியஆரச்சி | இல. 7/4, சிறில் ஜேன்ஸ் மாவத்தை, மடகும்புர, பாணந்துறை | பாணந்துறை |
| 31. | சட்டத்தரணி திரு. லங்கசார ஜயசுந்தர முதியன்சேலாகே தம்மிக சௌரத் பண்டார | இல. 03, ஹெரலியவல, குருநாகல் | குருநாகல் |
| 32. | சட்டத்தரணி திரு. பெர்னாந்து ஜோசப் அந்தனி | இல. 37, பலாலி வீதி, யாழ்ப்பாணம் | மல்லாகம் |
| 33. | சட்டத்தரணி திருமதி கந்தன ஆரச்சிகே தோன தமயந்தி குமாரி | இல. 8/1, கண்டி வீதி, மஹர, கடவத்த | மஹர |
| 34. | சட்டத்தரணி திரு. ஜயசிங்க முதியன்சேலாகே உடவலவ்வே பான்ஸ் ரம்புக்வெல்ல | இல. 1/40இ, கோணவல, திகன, ரஜவெல்ல | தெல்தெனிய |
| 35. | சட்டத்தரணி திருமதி ஹபக்கல கங்கானமலாகே தோன அஜந்தா சாந்தனீ அஜந்தா சாந்தனீ ஜயவர்தன | இல. 730பி, கொழும்பு வீதி, ஹிதெல்லன, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 36. | சட்டத்தரணி திரு. நெகதிகே சமரவீர | குருபேவில, பனலிய, பொல்காவலை | பொல்காவலை |
| 37. | சட்டத்தரணி திரு. உதுமா லெவ்வை லியாகத்அலி | இல. 43, மாத்ரஸா வீதி, கல்முனை | கல்முனை |
| 38. | சட்டத்தரணி திரு. ஹிரான் ஏக்கநாயக்க | பட்டகல ஸ்டேட், பகல வலவ்வே, மாஸ்வெல | கம்பளை |
| 39. | சட்டத்தரணி திரு. வீரசூரிய முதியன்சேலாகே சுந்தர பண்டார வீரசூரிய | நீர்கொழும்பு வீதி, உஹுமீய | பொல்காவலை |
| 40. | சட்டத்தரணி திரு. அபேரத்ன ஹேரத் முதியன்சேலாகே நளின் சந்தன அபேரத்ன | "சந்தசிறி", பாமன்கடை சந்தி, புத்தளம் வீதி | ஆனமடுவ |
| 41. | சட்டத்தரணி திரு. ருவன்புர சம்பத் சுஜீவ | இல. 19பி, வேலிபிட்டி, மோதர வீதி, கிந்தோட்டை | காலி |
| 42. | சட்டத்தரணி திருமதி கோபிகா பிரியஞ்சிகா மிரிஸ்ஸ லொக்குகே | இல. 357ஏ6, ஹேஸ்றி பேதிரிஸ் மாவத்தை, அங்கெதர, காலி | காலி |

| தொடர் இல. | பெயர் | முகவரி | நீதிமன்ற வலயம் |
|---|---|---|---|
| 43. | சட்டத்தரணி செல்வி அமுவத்தே முதியன்சேலாகே சபாசிலி மெனிகே | உடஹஅமுவத்த, பஸ்ஸரமுல்ல, இம்புல்பே, பலாங்கொடை | பலாங்கொடை |
| 44. | சட்டத்தரணி திருமதி மானெல் குசுமாஞ்சலி முதலிகே | "சவந்தி", வலஹந்தூவ, காலி | காலி |
| 45. | சட்டத்தரணி திரு. தித்வலகமகே தொன் கபில கல்யாண பெரேரா | இல. 472/1ஏ ரஜமாவத்தை, அதுருகிரிய வீதி, மாலபே | கடுவெல |
| 46. | சட்டத்தரணி திரு. தென்னகோன் முதியன்சேலாகே ஜயதிலக தென்னகோன் | "சுவர்ணமாலி", வேல்லேவ, பொல்காவலை | பொல்காவலை |
| 47. | சட்டத்தரணி திருமதி எதிரிமுனி சந்தியா லாலனி | இல. 467/1, நான்னேரிய வீதி, கல்கமுவ | மகவ |
| 48. | சட்டத்தரணி திரு. ஹபுஆரச்சிகே தொன் சிறிபால | மகவ வீதி, மடகல்ல, பொல்பிதிகம | மகவ |
| 49. | சட்டத்தரணி திரு. வசந்த மெனுவர ஆரச்சி | "ஶ்ரீ காந்த", இம்புல்பல, ஹெட்டிமுல்ல | கேகாலை |
| 50. | சட்டத்தரணி திருமதி வர்ணகுலசூரிய மாலனீ தேவிகா பெர்னாந்து | இல. 96, நந்தன மாவத்தை, மல்கடுவாவ, குருநாகல் | குருநாகல் |
| 51. | சட்டத்தரணி திரு. வர்ணகுலசூரிய பிரான்சிஸ் போர் பெர்னாந்து | புத்தளம் வீதி, புடுமுத்தாவ, நிகவெரட்டிய | நிகவெரட்டிய |

11-999

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்

*1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டதின் கீழ், அதற்கான அட்டவணையில்உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்க சபை உத்தேசித்துள்ளது.*

*2. ஆதலின், சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25(1), 26(1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.*

ரி. கே. ரத்னசூரிய,
செயலாளர்,
கடன் இணக்கச் சபை திணைக்களம்.

கடன் இணக்க சபை திணைக்களம்,
இல. 80, நீதிமன்ற மாவத்தை,
கொழும்பு 12.
2013, நவெம்பர் 11.

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (01) 39019 | திரு. சேனாநாயக அதுகோரலாகே பந்துல குமார, இல. 311, பூகொடை வீதி, தெல்லகொட. | திரு. பலவெனி ஆரச்சிகே ஹிரந்த ரொஷான் பெரேரா இல. 316/சீ 5, தெல்கொட. |
| (02) 42492 | திரு. மில்லவலகே சமரசிங்க, இல. 197, "நந்தன", மாஹேன, ஹொறணை. | ஜப்பான் லங்கா இன்டஸ்டிரியல் டிவொலொப்மன்ட் சென்டர், 49/14, 1/1, பயிப் வீதி, கொழும்பு 05. |
| (03) 42664 | திருமதி ஜயலத் ராலலாகே சீலவதி மெனிகே, இல. 13, பண்டாரநாயக மாவத்தை, நகர சபை விடுதி, பொல்காவலை. | திரு. தென்னகோன் முதியன்சேலாகே சமரசிங்க, மெட்டிகும்புர, வேவல, பொல்காவலை. |

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (04) 42729 | திரு. பாரகில்கெதர ஜனதா சுமேத குணபால, இல. 29/10ஏ, மல்லிகாராம வீதி, தெமட்டகொடை, கொழும்பு. | திருமதி பெரும்புலி ஆரச்சிகே ரூபா மாலனீ, வெலேகெதர, புவக்தண்டாவ, பெலிஅத்த. |
| (05) 42791 | திரு. எதிரிமுனி லலித் உதயசிறி, சியம்பலாகஸ்ருப்ப, தும்மலசூரிய. | திரு. வத்தகே கிளரன்ஸ் ரஞ்சித் பெர்னாந்து, இல. 14/3, பினான்ஸ் தோட்டம், பன்சலை வீதி, ஏகலை. |
| (06) 42796 | திரு. மாத்தற ஆரச்சிகே ரஞ்சித் பெரேரா, இல. 320/பி2, போகஹவத்த வீதி, நான்தூவ, மொரன்துடுவ. | திரு. மாதப்புலிகே தர்மசேன, 2 ஆம் கட்டை, ரன்ஹுஂன்கல, வஸ்கடுவ. |
| (07) 42807 | திருமதி கட்டுதம்பே வித்தானகே நிஷானி கீதிகா மாகிரெட், கலுகல்துடுவ, கட்டுதம்பே, ரத்கம. | திரு. நயிதுவா ஹென்னதிகே சனத் பிரியால், கெதரவத்த, கட்டுதம்பே, தொடன்தூவ. |
| (08) 42816 | திரு. நாவுல்லகே அருண திலக் பெரேரா, இல. 59/1, அன்டர்சன் வீதி, களுபோவில, தெகிவளை. | திரு. மகேஷ் இந்திக வித்தியாரத்ன, இல. 5/2, ரத்னாவலீ வீதி, களுபோவில. தெகிவளை. |
| (09) 42833 | திரு. போவல பதிரனகே நிமேஷ் சமன் சாலிந்த, இல. 46/2, உஸ்வத்த வீதி, தம்பே, மடபாத, பிலியந்தலை | திருமதி பதிரகே தோன கிளேரா கேர்ட்ரூட் டயஸ், இல. 3/4, பள்ளி வீதி, சுவாரபொல, பிலியந்தலை |

11-900

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக தேவாலயங்களை பதிவு செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (112 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கிணங்க பதிவாளர் நாயகம் ஏக்கநாயக்க முதியன்சேலாகே குணசேகர ஆகிய நான், பிரசித்த கிறிஸ்தவ தேவாலயமாக உபயோகிக்கப்படும் பின்வரும் கட்டிடம் திருமணத்தினை நிறைவேற்றுவதற்காக முறைப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கிறேன்.

| இலக்கம் | பதிவு செய்யப் பட்ட தினம் | விபரம் | அமைவிடம் | மதகுரு, உரிமையாளர் அல்லது பொறுப்பாளர் | கட்டிடம் பதிவு செய்யப்பட்டது எந்த மதத்திற்காக |
|---|---|---|---|---|---|
| 1442 | 2013.11.13 | புனித பாதிரி லியோ தேவஸ்தானம் | செத்சிரிகம, அத்துருகிரிய | வண. பிதா அல்பட் புல்லியாடன் | றோமன் கத்தோலிக்கம் |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
13.11.2013

11-1043

## எம்பிலிபிட்டி காணிப் பதிவகம்

ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டம் (117 ஆம் அத்தியாயம்)

2011 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கிணங்க சபரகமுவ மாகாணத்தின், எம்பிலிபிட்டி காணி பதிவகம் 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் இரத்தினபுரி காணிப் பதிவகத்தில் செயற்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் எம்பிலிபிட்டி காணிப்பதிவகம் இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட இடத்தில் நிறுவப்படு கின்றது என பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

இலக்கம் 395, கொழும்பு வீதி,
உடகம,
எம்பிலிபிட்டி.

2. இதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு கொண்டுவரும் வகையில் எம்பிலிபிட்டி காணிப் பதிவு மாவட்டம் ‘அ’ அட்டவணையில் குறிப்பிடப்படும் பிரதேசங்களும், இரத்தினபுரி காணிப்பதிவு மாவட்டம் ‘ஆ’ அட்டவணையில் குறிப்பிடப்படும் பிரதேசங்களும் அடங்கும் வகையில் இருக்கும்.

### ‘அ’ அட்டவணை

எம்பிலிபிட்டி பதிவு மாவட்டம்

1. எம்பிலிபிட்டி பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
2. கஹவத்த பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
3. கொலென்ன பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
4. கொடகவெல பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்

### ‘ஆ’ அட்டவணை

இரத்தினபுரி பதிவு மாவட்டம்

1. அயகம பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
2. எலபாத்த பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
3. இம்புல்பே பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
4. ஓபநாயக பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
5. கலவான பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
6. கிரிஎல்ல பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
7. குருவிட்ட பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
8. நிவிதிகல பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
9. பெல்மடுலை பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
10. பலாங்கொடை பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
11. இரத்தினபுரி பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்
12. வெலிகெபொல பிரதேச செயலக பிரிவிற்குரிய அதிகாரப் பிரதேசங்கள்

3. இதற்கிணங்க எம்பிலிபிட்டி பதிவு மாவட்டத்திற்குரிய எம்பிலிபிட்டி, கஹவத்த, கொலென்ன,கொடகவெல ஆகிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகளுக்கு உரித்தான ஆவணங்கள் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் எம்பிலிபிட்டி காணிப் பதிவகத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2013, நவெம்பர் 14.

11-1077

---

## 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் பயிலுநர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்கு விதிகள்) சட்டம்

10 ஆவது வாசகத்தின் கீழ் விடுக்கப்படும் உத்தரவு

### க/ தியலகொட ரோமன் கத்தோலிக்க ஆங்கில ஆண்கள் பாடசாலை

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன ஆகிய நான், 1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலை மற்றும் பயிலுநர் கல்லூரி (குறைநிரப்பு ஒழுங்கு விதிகள்) சட்டத்தின் 10 ஆவது வாசகத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கமைய செயற்பட்டு 12943 ஆம் இலக்க மற்றும் 1962.02.28 ஆந் திகதிய இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 780 ஆம் இலக்க ஒப்படைப்புக் கட்டளையின் உப ஆவணம் 1(அ) இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு மாத்திரம் உரித்தாகக் கூடியவாறு 2013.11.04 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்கிறேன்.

பந்துல குணவர்தன,
கல்வி அமைச்சர்.

இணைப்பு இல. : ED/05/69/01/01/118
‘‘இசுருபாய’’,
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2013 நவெம்பர் 04.

11-1050

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சியினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2013, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தின் போது பின்வரும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வென்னப்புவ, உல்ஹிட்டியாவ வடக்கு புனித சேவியர் மாவத்தை, இல. 774 இல் வசிக்கும் (தேசிய அடையாள அட்டை இல. 692801768 V) குருகுலசூரிய காமினி சுரேந்த்ர பெரேரா (இதனகத்துப்பின்னர் "கடன் பெற்றவர்" என அழைக்கப்படும்) என்பவரால் முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) தவணைக் கடன் வசதியொன்றையும், முப்பது இலட்சம் ரூபா (ரூ. 30,00,000) மேலதிகப் பற்றையும் பெற்றுள்ளதாலும், கடன் பெற்றவர் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நொத்தாரிசு ஜீ. ஏ. எல். பி. தம்மிக சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1533 ஆம் இலக்க 2011.08.17 ஆந் திகதிய அறுபது இலட்சம் ரூபா (ரூ. 60,00,000) ஈட்டு முறியை நிறைவேற்றி அத்தவணைக் கடன் வசதியின் காரணமாக கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயிடம் (இதனகத்துப் பின்னர் கொயூவ என அழைக்கப்படும்) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் அறவிட வேண்டிய அறுபது இலட்சம் ரூபா (ரூ. 60,00,000) தொகையையும், அதன் மீதான வட்டியையும் மீளச் செலுத்துவதற்குப் பிணைப் பொறுப்பாக இதன் கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை ஈடாகவும், பிணையாகவும் வைத்துள்ளதாலும், மேற்குறித்த தவணைக் கடன் வசதியின் காரணமாக 2013.01.31 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்த நிலுவைத் தொகையாகிய ஐம்பத்தைந்து இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து ஐநூற்று எண்பத்து மூன்று ரூபா எழுபது சதம் (ரூ. 55,93,583.70) ஆகிய தொகையும், 2013.02.01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அதன் மீது ஆண்டொன்றுக்கு 29 வீதம் வட்டியும் சொல்லப்பட்ட கடன் பெற்றவரிடமிருந்து கொயூவக்கு வருமதியாக சேரவேண்டியதாகவும் இருக்கின்றது.

கொயூவ பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதானாலும், சொல்லப்பட்ட கடன் பெற்றவரால் மேற்குறித்த கடன் தொகையின் நிலுவையை அல்லது அதன் ஒரு பகுதியை கொடுத்துத் தீர்ப்பதில் தவறுகை புரிந்துள்ளாரெனத் திருப்திப்பட்டுள்ளதனாலும் சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதிகள் மீதான ஐம்பத்தைந்து இலடசத்து தொண்ணூற்று மூவாயிரத்து ஐநூற்று எண்பத்து மூன்று ரூபா எழுபது சதம் (ரூ. 55,93,583.70) 2013.02.01 ஆந் திகதியிலிருந்து அதன் மீதான 29 வீத வட்டியையும், சொல்லப்பட்ட 1533 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் கொயூவக்கு மீட்டுக் கொள்வதற்கு உரித்துடைய அனைத்து ஏனைய தொகைகளையும் பெற்றுக்கொள்வதற்காக இங்கு அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள 2011.08.17 ஆந் திகதியிடப்பட்ட 1533 ஆம் இலக்க மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியினாலும், அதன் கீழும் கொயூவ க்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் நியதிகளினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளராகிய த்ரிவங்க அன்ட் சேனாநாயக்க ஒக்ஷனியர்ஸ் நிறுவனத்திற்கு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தின் மாறவில காணிப் பதிவுப் பிரிவில் பிடிகல் கோரளை தெற்கு கம்மல் பற்று உல்ஹிடியாவ கிராமத்தில் அமைந்துள்ள "லுனுமெதெல்லகஹவத்த" என்று அழைக்கப்படும் காணியின் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எம். டி. பர்னான்டோ அவர்களால் அளந்து தயார் செய்யப்பட்ட 3445 ஆம் இலக்க 1976.10.09 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் சகலதும் பிரித்தொதுக்கப்பட்ட சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டம் யு என அடையாளமிடப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கே : கே. பிரிட்ஜட் மெரயா பெரேரா அவர்களின் காணி ; கிழக்கே : உல்ஹிடியாவ ஆர். சி. தேவாலயத்தின் காணி ; தெற்கு : சேவியர் மாவத்த என அழைக்கப்படும் நகர சபை வீதி; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் B காணித்துண்டம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட சொல்லப்பட்ட காணித்துண்டம் 32 பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 32பே.) விஸ்தீரணத்தையும், அதன் கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதற்குரித்தான அனைத்தையும் உள்ளடக்கி அத்தோடு மாறவில காணிப் பதிவகத்தில் G 78/41 தொகுதி / பக்கத்தில் பதிவு செய்யப்பட்டது.

சொல்லப்பட்ட காணியானது வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தின் மாறவில காணிப் பதிவுப் பிரிவில் பிடிகல் கோரளை தெற்கு கம்மல் பற்று உல்ஹிடியாவ கிராமத்தில் அமைந்துள்ள "லுனுமெதெல்லகஹவத்த" என்று அழைக்கப்படும் காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். ஏ. பர்னான்டோ அவர்களால் மீண்டும் அளந்து தயார் செய்யப்பட்ட 3133 ஆம் இலக்க 2010.08.02 ஆந் திகதிய வரைபடத்தின் துண்டம் 01 என அடையாளமிடப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கே : கே. பிரிட்ஜட் மெரயா பெரேரா அவர்களின் காணி ; கிழக்கே : உல்ஹிடியாவ ஆர். சி. தேவாலயத்தின் காணி ; தெற்கு : சேவியர் மாவத்த என அழைக்கப்படும் நகர சபை வீதி; மேற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. பர்னான்டோ அவர்களினால் தயாரிக்கப்பட்ட இல. 3445 வரைபடத்தில் B காணித்துண்டம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட காணி 32 பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 32பே.) விஸ்தீரணமான காணித்துண்டு அதன் கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதற்குரித்தான அனைத்தையும் உள்ளடக்கியதுமாகும்.

பணிப்பாளர் சபையின் ஆணைப்படி,

எஸ். டீ. என். எஸ். கன்னங்கர,
பணிப்பாளர் சபையின் செயலாளர்.

11- 952

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) ) பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 338949 - வீரசேகர முதியன்சேலாகே துஷார வீரசேகர முதியன்சேலாகே சமிந்த ரன்மல்

30.08.2013 ஆந் திகதியன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி பணிப் பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :-

